**செய்தி வெளியீடு எண் : 1408** **நாள் : 10.09.2024**

**சிகாகோவில் 35 ஆண்டுகளும், அமெரிக்காவில் 53 ஆண்டுகளாக வசித்து வருபவருமான புகழ்பெற்ற மருத்துவர் சோம இளங்கோவன் அவர்கள் நெகிழ்ச்சி**

சிகாகோவில் 35 ஆண்டுகளும், அமெரிக்காவில் 53 ஆண்டுகளாக வசித்து வருபவருமான புகழ்பெற்ற மருத்துவர் சோம இளங்கோவன் அவர்கள் வெளியிட்டுள்ள செய்தி:–

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு! எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!
‘‘இது ஒரு கட்சியின் அரசல்ல
ஒரு இனத்தின் அரசு ‘‘
பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வார்த்தைகள்.

அமெரிக்காவின் பல மாநிலங்களில் இருந்து தமிழர்கள் திரண்டு வந்து பங்கேற்றனர். நாங்களும், விழாவிற்கு வந்திருந்த எங்கள் குழந்தைகளும் என்றென்றும் பேசி மகிழும் வரலாற்று நிகழ்ச்சியாக அமைந்து விட்டது. இதுவரை எனக்குத் தெரிந்த 53 ஆண்டுகளில் சிகாகோ விமான நிலையத்தில் இப்படி ஒரு வரவேற்பு நிகழ்ந்ததில்லை!

‘‘உங்கள் குடும்பத்தில் ஒருவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருக்கின்றார் என்று உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள்’’ என்றதும் விண்ணதிர வாழ்த்து அந்த பெரிய அரங்கத்தையே குலுக்கியது.

1971–ல் நாங்கள் அளித்த சிறிய வரவேற்பையே அன்புடன் பல முறை சொன்னவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல்

கருணாநிதி ஸ்டாலின் தனது மகிழ்ச்சியைச் சொல்லாலும், குழந்தைகளை அன்புடன் தொட்டுப் பேசி மகிழ்ந்த செயலாலும், அனைவருக்கும் அளித்த புன்னகையாலும் தெரிவித்தது வரலாறு சொல்லிக் கொண்டே இருக்கும்!

“திராவிட மாடல்” உலகறியும் கோட்பாடு ஆகியுள்ளது!

தமிழரின் பொற்காலம் தொடங்கி விட்டது!

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu